மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 I Email :mtdruitttsc@gmail.com I Web : www.mtsc.org.au

**பேச்சுப் போட்டி 2023**

## ஆண்டு 6

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு நடுநிலை வகிக்க வந்திருக்கும் நடுவர்களே, மற்றும் சபையோர்களே உங்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள். நான் உங்கள் முன்பேச எடுத்துக்கொண்ட தலைப்பு

# கல்வியின் சிறப்பு

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும், கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” என ஔவையார் கூறுகின்றார்.

நமது வாழ்க்கையை முன்னேற்றும் சக்திவாய்ந்த கருவி கல்வியாகும். மேலும் கற்றவரையே இந்த உலகம் மதிக்கும். திருவள்ளுவர் தமது குறளில்,
“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்”
ஒரு மகவைப் பெற்றெடுக்கும் போதுள்ள மகிழ்ச்சியைவிட, அப்பிள்ளை கல்வி கேள்விகளில் வல்லவன் என்று பிறர் கூறும்போது அந்தத் தாய் கூடிய மகிழ்ச்சி அடைகின்றாள்.

இளவயதிற் கற்க மறுப்பவன் தனது எதிர்காலத்தையே தொலைத்து விடுகின்றான். கோடி, கோடியாக வைத்திருப்பவனின் செல்வம் ஒரு கணப்பொழுதில் அழிந்து விடும், ஆனால் கல்வியை யாராலும் அழித்துவிட முடியாது.

எனவே, உலகின் விலைமதிப்பற்ற ஒப்பற்ற கல்விச் செல்வத்தைத் தொடர்ந்து கற்போம். கற்பவனுக்கு வயதெல்லையே கிடையாது. வாழ்நாள் முழுதும் கற்றுக்கொண்டே இருக்கலாம்.

“கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு”
“ பாடையிலே போகினும் ஏடது கைவிடேல்”
எனக் கூறி எனது உரையை முடிக்கின்றேன்.

நன்றி , வணக்கம்.



ஆக்கம் :
ஆசிரியர் திரு. எல்விஸ் எமிலியானுஸ்.
ஆசிரியர் திருமதி பிருந்தா பிரசன்னா.